## அலகு 11

# முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகள்

### பொருளடக்கம்


11.1 அறிமுகம்

11.2 முதலின மற்றும் வருவாயினச் செலவுகளைத் தீர்மானிக்கும் கருதுகோள்கள்

11.3 செலவுகளின் வகைப்பாடு

11.4 முதலினச் செலவு

11.5 வருவாயினச் செலவு

11.6 நீள்பயன் வருவாயினச் செலவு

11.7 முதலின, வருவாயின மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகள் – ஒப்பீடு

11.8 முதலின மற்றும் வருவாயின வரவுகள்

11.9 முதலின வரவுகள் மற்றும் வருவாயின வரவுகளுக்கிடையேயான வேறுபாடுகள்


### கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள்

- முதலின மற்றும் வருவாயினச் செலவினங்கள், முதலின மற்றும் வருவாயின வரவுகள் ஆகியவற்றின் பொருளைப் புரிந்து கொள்ளுதல்
- நீள் பயன் வருவாயினச் செலவின் பொருளைப் புரிந்து கொள்ளுதல்
- நடவடிக்கைகளை முதலினம் மற்றும் வருவாயினம் என வகைப்படுத்த பகுப்பாய்வு செய்தல்

### நினைவு கூற வேண்டிய கருத்துகள்

முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகளைக் கற்பதற்கு முன் கீழ்க்கண்டவற்றை நினைவு கூற வேண்டும்:

- பொருத்துகைக் கருத்து
- கணக்கியல் காலக் கருத்து
- வருமானம் மற்றும் செலவு

HH9TJD

### தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய சொற்கள்

- முதலினச் செலவு
- வருவாயினச் செலவு
- நீள்பயன் வருவாயினச் செலவு
- முதலின வரவுகள்
- வருவாயின வரவுகள்



Accountancy Ch 11_TM.indd 245 25-01-2020 14:51:33

## 11.1 அறிமுகம்

**மாணவர் செயல்பாடு**

**சிந்தனைக்கு:** ஒரு வியாபார நிறுவனம் எத்தனை முறை எழுது பொருட்களை வாங்குகிறது? எத்தனை முறை இயந்திரம் வாங்குகிறது? இவ்விரு செலவுகளையும் ஒரே மாதிரியான செலவுகளாக கருதுவது நியாயமானதா?

வணிக நடவடிக்கைகளைக் கணக்கேடுகளில் பதிவு செய்வதன் முக்கிய நோக்கம் வணிகச் செயல்பாடுகளின் முடிவு மற்றும் வணிக நிறுவனத்தின் நிதிநிலையைக் கண்டறிவதாகும். வணிக நடவடிக்கைகளில் இருந்து பெறக்கூடிய பலன் நடப்பு கணக்காண்டிற்கு மட்டுமாகவோ அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட கணக்காண்டிற்கு உரியதாகவோ இருக்கலாம். கணக்கியலின் பொருத்துகைக் கோட்பாட்டின்படி, நடப்பாண்டில் ஏற்பட்ட செலவுகள் அவ்வாண்டில் ஈட்டிய வருமானத்துடன் பொருத்திப் பார்க்கப்பட வேண்டும்.

சிலவகைச் செலவுகளின் மூலம் பெறக்கூடிய பலன் நடப்பு ஆண்டிற்குரியதாக மட்டுமே இருக்கும். அவை வருவாயினச் செலவுகள் எனப்படும். உதாரணமாக, சம்பளம், வாடகை போன்றவை. ஆனால், சில செலவுகளின் பலன் ஒரு கணக்காண்டிற்கு மேல் தொடர்ந்து இருக்கும். அவை முதலினச் செலவுகள் என்றழைக்கப்படுகின்றன.

நிறுவனத்தின் உண்மையான மற்றும் நியாயமான இலாப நட்டத்தையும், நிதிநிலையையும் கண்டறிய முதலின மற்றும் வருவாயின நடவடிக்கைகளை முறையாக ஒதுக்கீடு செய்வது அவசியமாகிறது. வருவாயின விவரங்கள், வியாபார மற்றும் இலாபநட்ட கணக்குகளிலும் மற்றும் முதலின விவரங்கள் இருப்புநிலைக் குறிப்பிலும் இடம் பெற வேண்டும்.

## 11.2 முதலின மற்றும் வருவாயினச் செலவுகளைத் தீர்மானிக்கும் கருதுகோள்கள்

முதலின மற்றும் வருவாயினச் செலவுகளைத் தீர்மானிக்கும் கருதுகோள்கள் பின்வருமாறு:

### (i) வணிகத்தின் தன்மை

சரக்கு கொள்முதலுக்கென செய்த செலவு வருவாயினச் செலவு ஆகும். சொத்துகள் வாங்குவதற்கான செலவு முதலினச் செலவு ஆகும். ஒரு செலவானது சரக்கு அல்லது சொத்து தொடர்புடையதா என்பது அவ்வணிகத்தின் தன்மையைப் பொறுத்தது ஆகும். சரக்கு என்பது ஒரு வணிகம் கையாளும் பண்டம் அல்லது பொருட்களை உள்ளடக்கியதாகும். உதாரணமாக, அறைகலன் வியாபாரம் செய்யும் நிறுவனத்திற்கு அறைகலன் வாங்குவதென்பது வருவாயினச் செலவாகும். ஆனால், பிற வியாபார நிறுவனத்திற்கு அறைகலன் வாங்குவது முதலினச்செலவாகும். அது இருப்புநிலைக்குறிப்பில் சொத்தாகக் காண்பிக்கப்படும். எனவே, ஒரு செலவு முதலினச் செலவா அல்லது வருவாயினச் செலவா என்பதை வகைப்படுத்துவதில் வணிகத்தின் தன்மை மிக முக்கியமான காரணியாகும்.

### (ii) வணிகத்தின் வருவாய் ஈட்டும் திறன் ஏற்படுத்தும் விளைவு

குறிப்பிட்ட செலவானது நடப்பு கணக்காண்டிற்கு மட்டும் வருமானம் அல்லது ஆதாயத்தினை ஈட்டுமேயானால் அது வருவாயினச் செலவாகும். மாறாக குறிப்பிட்ட செலவு, ஒன்றிற்கு மேற்பட்ட கணக்காண்டிற்கு வருவாயினைப் பெற்றுத்தந்தால் அது முதலினச்செலவு என்றழைக்கப்படும்.

### (iii) செலவின் நோக்கம்

ஒரு சொத்தினைப் பராமரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் வழக்கமான நடைமுறைச் செலவுகள், வருவாயினச் செலவுகள் ஆகும். மாறாக, ஒரு சொத்தினைப் பழுதுபார்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் பேரளவுச் செலவானது அச்சொத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்குமேயானால், அது முதலினச் செலவு எனப்படும்.



Accountancy Ch 11_TM.indd 246 25-01-2020 14:51:33

**(iv) பயன்படுத்தப்பட்ட தொகையின் முக்கியத்துவம்**

ஒரு செலவு முதலினச் செலவா அல்லது வருவாயினச் செலவா என்பதை வகைப்படுத்துவதில், தொகையுடன் தொடர்புடைய விகிதாச்சாரத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கொள்ளப்பட்ட செலவானது ஒரு சொத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்காத நிலையிலும், அச்செலவு முக்கியத்துவம் பெற்றதாக இருந்தால், அது முதலினச் செலவாகக் கருதப்படும். மாறாக, செலவானது முக்கியத்துவம் பெறாத நிலையில் அச்செலவின் பயனானது ஒன்றிற்கு மேற்பட்டக் கணக்காண்டிற்கு கிடைத்தாலும், அது வருவாயினச் செலவாகக் கருதப்பட வேண்டும். உதாரணமாக, குப்பைக்கூடை வாங்கியதற்கானச் செலவு ஒரு வருவாயினச் செலவாகும்.

## 11.3 செலவுகளின் வகைப்பாடு

செலவுகளைப் பின்வருமாறு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

(i) முதலினச் செலவு (ii) வருவாயினச் செலவு (iii) நீள்பயன் வருவாயினச் செலவு




## 11.4 முதலினச் செலவு

ஒரு கணக்காண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவின் பயனானது எதிர்வரும் ஆண்டுகளுக்கும் தொடர்ந்து கிடைக்குமானால் அச்செலவு முதலினச் செலவு ஆகும். இச்செலவு ஏதேனும் ஒரு நிலைச்சொத்து வாங்குவதற்கோ, வியாபார நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறனை அதிகரிப்பதற்கோ மேற்கொள்ளப்படலாம். இது திரும்பத் திரும்ப நிகழாத தன்மையுடையது.

### 11.4.1 முதலினச் செலவின் இயல்புகள்

கீழ்வருவன முதலினச் செலவின் இயல்புகளாகும்:

(i) அச்செலவு, ஒன்றிற்கும் மேற்பட்ட கணக்காண்டுகளுக்கு பலன் தரக்கூடியது.

(ii) அது, நிலைச்சொத்து வாங்குவதற்கும், வாங்கிய நிலைச்சொத்தினை பயன்படுத்த தயாராகும் வரை மேற்கொள்ளப்பட்ட செலவுகளையும் உள்ளடக்கியது.

(iii) அச்செலவு, வணிக நிறுவனத்தின் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிப்பதில் பங்களிக்கிறது.

(iv) திரும்பத் திரும்ப நிகழாத தன்மையுடையது.

(v) இருப்புநிலைக் குறிப்பின் சொத்துகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

**உதாரணங்கள்**

- நிலம் மற்றும் கட்டடம் வாங்குவதற்கானச் செலவு.
- அலுவலக உபகரணங்கள், கணிப்பொறி மற்றும் குளிர் சாதனக் கருவி வாங்கியச் செலவுகள்.
- பொறி மற்றும் இயந்திரம் வாங்குவதற்கானச் செலவுகள், அவைகளை நிறுவுவதற்கானச் செலவுகள் மற்றும் சோதனை ஓட்டச் செலவுகள்.

## 11.5 வருவாயினச் செலவு

வணிக நிறுவனத்தின் அன்றாட செயல்பாட்டிற்கான செலவும், வருவாய் ஈட்டும் திறனைத் தக்கவைத்துக்கொள்ள மேற்கொள்ளப்படும் செலவும் வருவாயினச் செலவு எனப்படும். இச்செலவு திரும்பத் திரும்ப நிகழும் தன்மையுடையது. ஒரு குறிப்பிட்ட கணக்காண்டிற்கு மட்டும் வருவாயினை ஈட்ட இச்செலவு மேற்கொள்ளப்படும். வருவாயினச் செலவு வருவாயுடன் தொடர்புடையது அல்லது குறிப்பிட்ட கணக்காண்டோடு தொடர்புடையது. உதாரணமாக, கொள்முதல் மீதானச் செலவு ஒரு வருவாயினச் செலவு. இது விற்பனை வருவாயுடன் தொடர்புடையது. வாடகை மற்றும் சம்பளம் குறிப்பிட்ட கணக்காண்டோடு தொடர்புடையது.



Accountancy Ch 11_TM.indd 247 25-01-2020 14:51:33

### 11.5.1 வருவாயினச் செலவின் இயல்புகள்

வருவாயினச் செலவின் இயல்புகள் பின்வருமாறு:

(i) இது திரும்பத் திரும்பத் நிகழும் தன்மையுடையது.

(ii) வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனைத் தக்கவைத்துக் கொள்ள, இச்செலவு மேற்கொள்ளப்படுகிறது.

(iii) இதன் பயன் அந்த கணக்காண்டிலேயே முடிவடைகிறது.

(iv) இது வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கின் பற்றுப்பக்கத்தில் இடம் பெறும்.

**உதாரணங்கள்**

- மறு விற்பனைக்கெனச் செய்யப்படும் கொள்முதல்
- நிர்வாக, விற்பனை மற்றும் வழங்கல் செலவுகள்
- உற்பத்திச் செலவுகள்

**மாணவர் செயல்பாடு**

**சிந்தனைக்கு:** பள்ளி மற்றும் வீடுகளில் மேற்கொள்ளப்படும் செலவுகளை முதலினம், வருவாயினம் என அடையாளம் கண்டு அவைகளைப் பட்டியலிடவும்.

## 11.6 நீள்பயன் வருவாயினச் செலவு

நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாயினத் தன்மையுள்ள ஒரு செலவின் பயன், எதிர் வரும் ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால், அச்செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும். இச்செலவின் பயன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு கிடைக்கும். இது, நடப்பாண்டின் வருவாயுடன் பொருத்துவதிலிருந்து ஒத்திவைக்கப்படுகின்றது, இது குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு வருமானத்திலிருந்து போக்கெழுதப்படுகிறது.

இச்செலவு ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கு நிறுவனம் ஈட்டும் வருமானத்தின் மீது சரிக்கட்டப்படும்.

### 11.6.1 நீள்பயன் வருவாயினச் செலவின் இயல்புகள்

நீள்பயன் வருவாயினச் செலவின் இயல்புகள் பின்வருமாறு:

(i) இது ஒரு வருவாயினச் செலவு. இச்செலவின் பயன் எதிர்வரும் காலத்தில் கிடைக்கக் கூடியது.

(ii) இச்செலவு, செலவழித்த ஆண்டிலேயே முழுவதும் போக்கெழுதப்படுவதில்லை. குறிப்பிட்ட சில ஆண்டுகளில் போக்கெழுதப்பட வேண்டும்.

(iii) போக்கெழுதியது போக மீதமுள்ள தொகை (உள்ளபடியான செலவு – போக்கெழுதிய தொகை) இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

**உதாரணங்கள்**

- விளம்பரத்திற்காக செய்யப்பட்ட பேரளவுத் தொகை
- பொறி மற்றும் இயந்திரம் மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவுகள்

## 11.7 முதலின, வருவாயின மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகள் – ஒப்பீடு

முதலின, வருவாயின மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகளின் ஒப்பீடு பின்வருமாறு:

| அடிப்படை | முதலினச்செலவு | வருவாயினச் செலவு | நீள்பயன் வருவாயினச் செலவு |
|---|---|---|---|
| (i) தன்மை | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது. | அடிக்கடி நிகழும் தன்மையுடையது. | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது. |
| (ii) நோக்கம் | வருவாய் ஈட்டும் திறனை அதிகரிப்பதே இச்செலவின் நோக்கம். | வியாபாரத்தின் அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்வதே இச்செலவின் நோக்கம். | குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு பலன் பெற இச்செலவு மேற்கொள்ளப்படுகிறது. |
| (iii) பயனளிப்பு காலம் | இச்செலவின் பலன் நீண்ட காலத்திற்கு கிடைக்கும். | நடப்பு ஆண்டிற்கு மட்டுமே பலன் கிடைக்கிறது. | பலனை ஒரு கணக்காண்டிற்கு மேல் எதிர்பார்க்க முடியும். |



Accountancy Ch 11_TM.indd 248 25-01-2020 14:51:33

| | | | |
|---|---|---|---|
| (iv) இலாபம் ஈட்டும் திறனில் ஏற்படுத்தும் விளைவு | வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்யும். | வணிகத்தின் இலாபம் ஈட்டும் திறனைப் பராமரித்து வைத்துக்கொள்ள உதவும். | சில ஆண்டுகளுக்கு வணிகத்திற்கு பலன் தரக் கூடியது. |
| (v) கணக்கியல் நடைமுறை | இருப்பு நிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கத்தில் தோன்றும். | நேரடிச் செலவெனில் வியாபாரக் கணக்கின் பற்றுப்பக்கத்திலும், மறைமுகச் செலவெனில் இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும் தோன்றும். | நடப்பு ஆண்டில் போக்கெழுதப்பட்ட தொகை இலாபநட்டக் கணக்கின் பற்றுப்பக்கத்திலும் எஞ்சியுள்ள தொகை இருப்புநிலைக் குறிப்பில் சொத்துகள் பக்கத்திலும் தோன்றும். |

## 11.8 முதலின மற்றும் வருவாயின வரவுகள்

**மாணவர் செயல்பாடு**

**சிந்தனைக்கு:** துணி வியாபாரம் செய்யும் நிறுவனமானது, தனது பயன்படுத்தப்படாத நிலத்தினை விற்று தொகையினைப் பெற்றுக் கொண்டது. இதனை வழக்கமான விற்பனையாகக் கருதலாமா? இதனை வியாபாரக் கணக்கில் காண்பிக்கலாமா?

### 11.8.1 முதலின வரவு

வருவாயினத்தைச் சாராத வரவுகள் அனைத்தும் முதலின வரவு எனப்படும். இது திரும்பத் திரும்ப நிகழாதத் தன்மையுடையது. பெறப்பட்ட தொகை பொதுவாக கணிசமானதாக இருக்கும். இவ்வகை வரவுகள் இருப்புநிலைக் குறிப்பின் பொறுப்புகள் பக்கத்தில் காண்பிக்கப்படும்.

**உதாரணங்கள்**

- பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் கிடைக்கும் தொகை
- வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற நீண்டகாலக் கடன்
- நிலைச் சொத்து விற்பனைச் செய்வதில் பெற்றத் தொகை
- நீண்ட கால முதலீட்டினை விற்பனைச் செய்து பெற்றத் தொகை, சிறப்பு நன்கொடைப் பெற்றது

### 11.8.2 வருவாயின வரவு

வணிகத்தின் வழக்கமான நடைமுறைகளிலிருந்து பெறக்கூடிய வருமானங்கள் வருவாயின வரவுகளாகும். இது திரும்பத் திரும்ப நிகழும் தன்மையுடையது. இவ்வாறு பெறப்படும் தொகையானது பொதுவாக சிறிய அளவிலான தொகையாக இருக்கும்.

**உதாரணங்கள்**

- சரக்கு விற்பதனால் கிடைக்கும் தொகை
- வாடகைப் பெற்றது
- முதலீடுகள் மீது பெற்ற வட்டி
- பங்கு முதலீட்டின் மீது பெற்ற பங்காதாயம்

## 11.9 முதலின வரவுகள் மற்றும் வருவாயின வரவுகளுக்கிடையேயான வேறுபாடுகள்

முதலின வரவுகள் மற்றும் வருவாயின வரவுகளுக்கிடையேயான முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு:

| அடிப்படை | முதலின வரவு | வருவாயின வரவு |
|---|---|---|
| (i) தன்மை | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது. | அடிக்கடி நிகழும் தன்மையுடையது. |
| (ii) அளவு | பெரும்பாலும் பேரளவிலான தொகையாக இருக்கும். | சிறிய அளவிலான தொகையாக இருக்கும். |
| (iii) பகிர்வு | இத்தொகையை இலாபமாக கருதி பகிர்ந்தளிக்க முடியாது. | வருவாயின செலவைக் காட்டிலும் மிகுதியான வருவாயின வரவுகள் இலாபமாக கருதிப் பகிர்ந்து அளிக்கப்படும். |



Accountancy Ch 11_TM.indd 249 25-01-2020 14:51:33

**முதலின மற்றும் வருவாயினங்களின் எடுத்துக்காட்டுகள்:**

| முதலினச் செலவு | வருவாயினச் செலவு | நீள்பயன் வருவாயினச் செலவு | முதலின வரவு | வருவாயின வரவு |
|---|---|---|---|---|
| (i) நிலைச் சொத்து வாங்குவதற்கான செலவு<br>(ii) நீண்டகால முதலீடு செய்தது<br>(iii) இலாபம் ஈட்டும் திறனை அதிகரிக்க செய்யும் செலவு<br>(iv) மூன்றாம் நபருக்கு வழங்கிய கடன்<br>(v) நற்பெயர், வணிகக்குறி, பதிப்புரிமை போன்றவற்றை வாங்குவதற்கான செலவு<br>(vi) நிலைச்சொத்துகள் நிறுவுவதற்கான செலவு<br>(vii) இயந்திரத்தை சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்கு செய்த செலவுகள் | (i) நிலைச் சொத்து பராமரிப்பதற்கான செலவு<br>(ii) காப்பீட்டு முனைமம் செலுத்தியது<br>(iii) அஞ்சல் மற்றும் எழுது பொருள் வாங்கியது<br>(iv) நிர்வாக, விற்பனை மற்றும் வழங்கல் செலவுகள்<br>(v) சிறிய அளவிலான விளம்பரச் செலவு<br>(vi) மதிப்பூதியம் வழங்கியது<br>(vii) ஆண்டுச் சந்தா செலுத்தியது<br>(viii) பொழுதுபோக்குச் செலவுகள் | (i) பேரளவிலான விளம்பரச் செலவு<br>(ii) நிலைச்சொத்து மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவு | (i) ஆயுள் சந்தா பெற்றது<br>(ii) சிறப்பு நன்கொடைப் பெற்றது<br>(iii) பெற்ற கடன்<br>(iv) நீண்டகால முதலீட்டினை விற்பனை செய்தது<br>(v) முதல் தொகை மீதான பங்களிப்பு<br>(vi) நிலைச்சொத்து விற்பனைச் செய்தது<br>(vii) அரசு மானியம் (குறிப்பிட்ட நோக்கத்திற்கானது மட்டும்)<br>(viii) வழக்கமான நடைமுறைகள் அல்லாத வழியில் பெறப்படும் தொகை | (i) சரக்கு விற்பனை மீதான வருவாய்<br>(ii) கழிவுப் பெற்றது<br>(iii) பழைய செய்தித்தாள் விற்பனைச் செய்தது<br>(iv) வாடகைப் பெற்றது<br>(v) அரசு மானியம் (பொது நோக்கத்திற்கானது)<br>(vi) முதலீடுகள் மீதான வட்டி<br>(vii) வாராக்கடன் திரும்ப பெற்றது |



Accountancy Ch 11_TM.indd 250 25-01-2020 14:51:33

### எடுத்துக்காட்டு 1

பின்வருபவை முதலினச் செலவுகளா அல்லது வருவாயினச் செலவுகளா என்பதை காரணத்துடன் விளக்கவும்.

(i) தொழிற்சாலை தொடங்க உரிமம் பெறுவதற்காகச் செலுத்தியக் கட்டணம் ₹ 25,000

(ii) தொழிற்கூடம் கட்டுவதற்கானச் செலவு செய்தது ₹ 2,00,000 மற்றும் கட்டுமானப் பொருட்கள் சேகரித்து வைப்பதற்காக தற்காலிக குடிசைகள் கட்டியச் செலவு ₹ 10,000

(iii) வாங்கிய பழைய இயந்திரத்தைப் புதுப்பிப்பதற்கானச் செலவு ₹ 5,000

#### தீர்வு

(i) தொழிலை நடத்துவதற்கான உரிமம் பெறுவதற்காகச் செய்த செலவு என்பதால், இச்செலவு முதலினச் செலவாகும்.

(ii) தற்காலிக குடிசைகள் உட்பட, தொழிற்கூடம் கட்டுவதற்கானச் செலவு முதலினச் செலவாகும்.

(iii) வாங்கிய பழைய இயந்திரத்தின் மீதான துவக்கப் பராமரிப்புச் செலவு என்பது நீண்ட கால பலனைத் தருவதால் இது ஒரு முதலினச் செலவாகும்.

### எடுத்துக்காட்டு 2

பின்வருபவை முதலினச் செலவா, வருவாயினச் செலவா அல்லது நீள்பயன் வருவாயினச் செலவா என்பதை காரணத்துடன் விளக்கவும்.

(i) புதிய பொருளை அறிமுகப்படுத்துவதற்காகச் செய்யப்பட்ட விளம்பரச்செலவுகள் ₹ 10 கோடி

(ii) புதிய இயந்திரத்தைக் கொள்முதல் செய்து அலுவலகத்திற்கு கொண்டு வந்து நிறுவுவதற்கானச் செலவு.

(iii) புதிதாக இயந்திரம் வாங்கியதன் மீதான ஏற்றிச் செல் செலவு, காப்பீட்டுக் கட்டணம் மற்றும் வண்டிக் கட்டணம்.

#### தீர்வு

(i) பேரளவிலான விளம்பரச் செலவின் பயன் ஒன்றிற்கு மேற்பட்ட கணக்காண்டுகளுக்கு நீடிக்கும். இச்செலவு புலனாகும் / புலனாகாச் சொத்துக்களை உருவாக்கவில்லையென்றாலும் இது நீள்பயன் வருவாயினச் செலவாகும்.

(ii) இயந்திரத்தைப் பயன்படுத்த தயாராக்குவதற்கு செய்யப்படும் செலவுகள் முதலினச் செலவுகளில் அடங்கும்.

(iii) இயந்திரம் வாங்கி, அதனைத் தொழிற்சாலைக்கு கொண்டு வந்து பயன்படுத்தும் வரையிலான செலவுகள் முதலினச் செலவுகளாகும்.

### எடுத்துக்காட்டு 3

பின்வரும் செலவினங்கள் முதலினம், வருவாயினம், மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகளா எனக் கூறுக.

(i) புதிய இயந்திரம் வாங்கியதற்கான ஏற்றிச்செல் கட்டணம், மற்றும் நிறுவுகைச் செலவுகள் ₹ 1,000

(ii) அலுவலக வாடகைச் செலுத்தியது ₹ 2,000

(iii) இயந்திரம் இயக்குபவருக்கான கூலி செலுத்தியது ₹ 5,000

(iv) ஐந்து வருடங்களுக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட மோட்டார் வாகனம் மீதான வாடகை, ஒவ்வொரு வருடமும் செலுத்தப்படுகிறது.

#### தீர்வு

(i) இயந்திரம் வாங்கி, நிறுவுவதற்கான செலவுகள் ₹ 1,000 முதலினச் செலவாகும்.

(ii) அலுவலக வாடகை செலுத்தியது ₹ 2,000 வருவாயினச் செலவு.

(iii) இயந்திரம் இயக்குபவருக்கான கூலி செலுத்தியது ₹ 5,000 வருவாயினச் செலவு.

(iv) ஐந்து வருடங்களுக்கு அமர்த்தப்பட்ட வாகனம் மீதான வாடகை, ஒவ்வொரு வருடமும் செலுத்தப்படும் போது அது ஒரு வருவாயினச் செலவாகும்.

### எடுத்துக்காட்டு 4

பின்வருபவை முதலின, வருவாயின, இனங்களா என்பதை கூறுக.

(i) ஏற்கனவே உள்ள கட்டடத்தோடு கூடுதலாகக் கட்டியது ₹ 5,000

(ii) பழைய மகிழுந்து வாங்கியது ₹ 30,000 மேலும், அதனை உடனடியாக பழுது பார்த்ததற்கானச் செலவு ₹ 2,000

(iii) புதிய தொழிற்சாலையை வண்ணம் பூசுவதற்கானச் செலவு ₹ 10,000

(iv) புதிய இயந்திரம் மீதான ஏற்றிச் செல் செலவு, வண்டிக்கட்டணம் ₹ 150 மற்றும் நிறுவுகைச் செலவுகள் ₹ 200

(v) வாங்கிய பழைய வாகனத்தை பழுது பார்த்ததற்கானச் செலவு ₹ 150

### தீர்வு

(i) ஏற்கனவே உள்ள கட்டடத்தோடு கூடுதலாகக் கட்டியதற்கானத் தொகை ₹ 5,000 முதலினச் செலவாகும்.

(ii) பழைய மகிழுந்து வாங்கியது மற்றும் அதை உடனடியாக பழுதுபார்ப்புச் செய்த செலவு மொத்தம் ₹ 32,000 முதலினச் செலவாகும்.

(iii) புதிய தொழிற்சாலைக்கான வண்ணம் பூசியதற்கானச் செலவு ₹ 10,000 முதலினச் செலவாகும்.

(iv) ஏற்றிச் செல் செலவு வண்டிக் கட்டணம் மற்றும் நிறுவுகைச் செலவு முதலினச் செலவாகும்.

(v) பழைய வாகனம் வாங்கி உடனடியாக பழுதுபார்த்தது ₹ 150 முதலினச் செலவாகும்.

### எடுத்துக்காட்டு 5

பின்வரும் செலவுகளை முதலின, வருவாயினச் செலவுகள் என வகைப்படுத்துக.

(i) ₹ 3,200 பின்வருமாறு இயந்திரத்தின் மீது செலவழிக்கப்பட்டது.

(அ) உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரிக்க சேர்க்கப்பட்ட கூடுதல் இயந்திரத்தின் மதிப்பு ₹ 2,000

(ஆ) கவனக்குறைவால் ஏற்பட்ட பழுதினைச் சரி செய்ய ₹ 1,200 செலவழிக்கப்பட்டது.

(ii) வாகனத்தின் எரிபொருள் திறனை அதிகரிக்க, அதன் இயந்திரத்தைப் புதுப்பிக்க மேற்கொண்ட செலவு ₹ 25,000.

### தீர்வு

(i) (அ) கூடுதல் இயந்திரத்தைச் சேர்க்க செலவழித்த தொகை ₹ 2,000 முதலினச் செலவாகும்.

(ஆ) பழுதுபார்ப்புச் செலவு ₹ 1,200 வருவாயினச் செலவாகும்.

(ii) வாகனத்தின் எரிபொருள் திறனை அதிகரிக்க இயந்திரத்தைப் புதுப்பித்தது முதலினச் செலவாகும்.

### எடுத்துக்காட்டு 6

கீழ்க்காணும் செலவினங்களையும், வரவினங்களையும் முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.

(i) நிலைச்சொத்து வாங்குவதற்காக, இயக்குனரின் வெளிநாட்டுப்பயணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகை ₹ 10,000.

(ii) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை.

(iii) புதிய கட்டடம் கட்டுவதற்காக பழைய கட்டடத்தை இடிப்பதற்கு மேற்கொண்ட செலவு.

(iv) தீயினால் இயந்திரத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்காக பெறப்பட்ட காப்பீட்டுரிமைத் தொகை.

**தீர்வு**

(i) முதலினச் செலவு (ii) வருவாயின வரவு

(iii) முதலினச் செலவு (iv) முதலின வருவாய்

**நினைவில் கொள்ள வேண்டியவை**

- வணிகத்தின் செலவுகளை முதலினச் செலவுகள், வருவாயினச் செலவுகள் மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகள் என வகைப்படுத்தலாம்.
- ஒரு கணக்காண்டில் மேற்கொண்ட செலவின் பயன், ஒன்றிற்கு மேற்பட்டக் கணக்காண்டிற்கு தொடர்ந்து கிடைக்குமானால் அச்செலவு முதலினச் செலவாகும்.
- வணிகத்தின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்யப்படும் செலவுகள் அல்லது வணிகத்தின் வருவாய் ஈட்டும் திறனைப் பராமரிப்பதற்கு செய்யப்படும் செலவுகள் வருவாயினச் செலவுகள் ஆகும்.
- வருவாயினம் சார்ந்த ஒரு செலவின் பயனானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளிலும் தொடர்ந்து கிடைக்குமானால் அச்செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும்.
- வணிகத்தின் வழக்கமான நடவடிக்கைகளில் இருந்து பெறக்கூடிய வருமானங்கள் வருவாயின வரவுகள் ஆகும். வணிகத்தின் வழக்கமான நடவடிக்கைகளில் அல்லாமல் பிற வழிகளில் பெறக்கூடிய வருமானங்கள் முதலின வரவுகள் ஆகும்.

## சுய ஆய்வு வினாக்கள்

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்
   (அ) முதலினச் செலவு (ஆ) வருவாயினச் செலவு
   (இ) நீள்பயன் வருவாயினச் செலவு (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

2. புதிதாக நிறுவப்பட்ட இயந்திரத்தினைச் சோதனை ஓட்டம் மேற்கொள்வதற்குச் செய்த செலவு ₹ 20,000
   (அ) தொடக்கச் செலவு (ஆ) வருவாயினச் செலவு
   (இ) முதலினச் செலவு (ஈ) நீள்பயன் வருவாயினச் செலவு

3. வங்கி வைப்புகள் மீதான வட்டி
   (அ) முதலின வரவு (ஆ) வருவாயின வரவு
   (இ) முதலினச் செலவு (ஈ) வருவாயினச் செலவு

4. நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தர காலக் கடன் தொகை
   (அ) முதலினச் செலவுகள் (ஆ) வருவாயினச் செலவுகள்
   (இ) வருவாயின வரவுகள் (ஈ) முதலின வரவுகள்

5. வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது
   (அ) கடந்த காலத்திற்கு (ஆ) எதிர் காலத்திற்கு
   (இ) நடப்பு காலத்திற்கு (ஈ) எந்த காலத்திற்கும்

6. வணிகச் செயல்பாட்டிற்கு முந்தைய செலவுகள்
   (அ) வருவாயினச் செலவுகள் (ஆ) முன் கூட்டி செலுத்திய வருவாயினச் செலவுகள்
   (இ) நீள்பயன் வருவாயினச் செலவுகள் (ஈ) முதலினச் செலவுகள்

**விடைகள்**

| 1 (அ) | 2 (இ) | 3 (ஆ) | 4 (ஈ) | 5 (இ) | 6 (ஈ) |
|---|---|---|---|---|---|



Accountancy Ch 11_TM.indd 253 25-01-2020 14:51:34

## II மிகக் குறுகிய வினாக்கள்

1. வருவாயினச் செலவு என்றால் என்ன?
2. முதலினச் செலவு என்றால் என்ன?
3. முதலின வரவு என்றால் என்ன?
4. வருவாயின வரவு பற்றி சிறு குறிப்பு தரவும்.
5. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன?

## III குறுகிய வினாக்கள்

1. முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும்.
2. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.
3. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.

## IV பயிற்சிக் கணக்குகள்

1. பின்வரும் செலவினங்களை முதலினம், வருவாயினம், நீள்பயன் வருவாயினச் செலவினங்களாக, வகைப்படுத்தவும்.
   (i) மூன்று ஆண்டுகளுக்கு பயனளிக்கும் வகையில் செய்யப்பட்ட விளம்பரச் செலவு.
   (ii) கட்டடம் பதிவு செய்யும் போது செலுத்திய பதிவுக் கட்டணம்.
   (iii) பழைய கட்டடம் வாங்கிய போது, அதனைப் பராமரித்து, வண்ணம் பூசி பயன்படுத்துவதற்கு ஏற்றாற்போல் மாற்றியதற்கானச் செலவு.
   (**விடை:** முதலினச் செலவு : (ii), (iii) நீள்பயன் வருவாயினச் செலவு: (i))
2. பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயினச் செலவினங்களாக வகைப்படுத்தவும்.
   (i) நிலம் வாங்குவதற்குச் செய்யப்பட்ட பத்திரப்பதிவு கட்டணம்.
   (ii) வாங்கிய பழையக் கட்டடத்தைப் புதுப்பிப்பதற்காகச் செய்த பழுது பார்ப்புச் செலவுகள்.
   (iii) சரக்குக் கொள்முதலின் போது செலுத்திய ஏற்றிச்செல் கட்டணம்.
   (iv) கடன் பெறுவதற்காகச் செய்யப்பட்ட சட்டச் செலவுகள்.
   (**விடை:** முதலினம்: (i), (ii), (iv) வருவாயினம்: (iii))
3. பின்வரும் செலவுகளை முதலினம் அல்லது வருவாயினம் எனக் கூறவும்.
   (i) கட்டடம் கட்டியதற்கான தொகை ₹ 10,00,000.
   (ii) அறைகலன் பழுதுபார்த்தது ₹ 50,000.
   (iii) கட்டடத்தை வெள்ளை அடிப்பதற்கானச் செலவு ₹ 80,000.
   (iv) பழைய கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்டியது ₹ 4,00,000.
   (**விடை:** முதலினம்: (i), (iv) வருவாயினம்: (ii), (iii))
4. பின்வருவனவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.
   (i) இரயில்வேத் துறைக்கு, இரயில் தண்டவாளம் அமைக்க செலுத்திய தொகை ₹ 50,000.
   (ii) பழைய அறைகலன் விற்றதில் ஏற்பட்ட நட்டம்.
   (iii) சரக்கு விற்பனையின் பேரில் செலுத்திய ஏற்றிச்செல் கட்டணம்.
   (**விடை:** முதலினம் (i), வருவாயினம்: (ii), (iii))
5. பின்வரும் செலவினங்களை முதலின, வருவாயின அல்லது நீள்பயன் வருவாயினச் செலவினங்களா எனக் கூறவும்.
   (i) நிலம் வாங்குவதற்காக வழக்கறிஞருக்கு கொடுத்த சட்டச் செலவுகள் ₹ 20,000
   (ii) புதிய பொருளைச் சந்தையில் அறிமுகப்படுத்த மேற்கொண்ட பேரளவிலான விளம்பரச் செலவுகள் ₹ 12,00,000
   (iii) தொழிற்சாலை உரிமம் புதுப்பித்தது ₹ 12,000
   (iv) தொழிற்சாலையில் வண்ணம் பூசுவதற்கானச் செலவு ₹ 4,000
   (**விடை:** முதலினம்: (i) வருவாயினம்: (iii), (iv) நீள்பயன் வருவாயினம்: (ii))



Accountancy Ch 11_TM.indd 254 25-01-2020 14:51:34

6. பின்வரும் நடவடிக்கைகளை முதலினம், மற்றும் வருவாயினமாக வகைப்படுத்தவும்.
   (i) சரக்கு விற்பனை வாயிலாகப் பெற்றது ₹ 75,000.
   (ii) வங்கியிடமிருந்து பெற்றக் கடன் ₹ 2,50,000.
   (iii) முதலீடு விற்பனைச் செய்தது ₹ 1,20,000.
   (iv) கழிவுப் பெற்றது ₹ 30,000.
   (v) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது ₹ 1,400.

(**விடை:** முதலினம்: (ii), (iii), (v) வருவாயினம்: (i), (iv))

7. கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.
   (i) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹ 10,000.
   (ii) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹ 5,000.
   (iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹ 2,000.
   (iv) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹ 3,000.
   (v) ஆலை வாடகைச் செலுத்தியது ₹ 12,000.

(**விடை:** முதலினம்: (iv) வருவாயினம்: (i), (ii), (iii), (v))

**நிகழ்வாய்வு**

சாதனா என்பவர் குளிர்சாதன இயந்திரங்களை வாங்கி விற்கும் தொழில் தொடங்க முடிவு செய்தார். அதன் காரணமாக சில குளிர்சாதன இயந்திரங்களையும், அவைகளை விநியோகம் செய்யும் வாகனம், மற்றும் குளிர்சாதன இயந்திரங்களைப் பொருத்துவதற்கு தேவையான கருவிகளையும், அறைகலன் சிலவற்றையும் வாங்கினார். மேலும், சில எழுதுப் பொருட்களையும், அறைகளை சுத்தம் செய்வதற்கான பொருட்களையும் வாங்கினார். மேலும், தமது நிறுவனத்தை விளம்பரப்படுத்துவதற்கு குறிப்பிட்டத் தொகையினைச் செலவழித்தார். மேற்கூறியவற்றிற்காக அவர் செய்த அனைத்துச் செலவுகளையும் வியாபாரக் கணக்கில் பதிவு செய்தார்.

பின்வரும் கருத்துகளை விவாதிக்கவும்

- அவர் முதலாமாண்டில் வியாபாரத்திற்காக செலவழித்த அனைத்துத் தொகையையும் வியாபாரக் கணக்கில் பதிவு செய்தது சரியானதா? அவ்வாண்டின் இலாபத்தில் அவருடைய அச்செயலின் விளைவு எப்படி இருக்கும்?
- அவருடைய நிலைச் சொத்துகள் யாவை?
- அவர் கணக்கியல் கொள்கைகயைப் பின்பற்றுகிறாரா? இல்லையென்றால் கணக்கியலின் எக்கொள்கையை அவர் பின்பற்றவில்லை?
- செலவுகளை வகைப்படுத்துவதில் உங்களால் சாதனாவிற்கு உதவ முடியுமா?
- வேறு எந்த வகையான முதலின, வருவாயின, நீள்பயன் வருவாயினச் செலவுகளை எதிர்காலத்தில் அவர் மேற்கொள்ளலாம்?

**தொடர் ஆய்விற்கு**

செலவழிக்கப்படும் தொகையின் அளவு, அச்செலவை முதலினம், வருவாயினம், நீள்பயன் வருவாயினம் என தீர்மானிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் என நினைக்கிறீர்களா? நியாயப்படுத்தவும்.

## பார்வை


1. M C Shukla, T S Grewal and S C Gupta, Advanced Accounts, 19th ed., 2017, S.Chand Publishing, New Delhi.
2. R L Gupta and V K Gupta, Financial Accounting, 11th ed., 2014, Sultan Chand and Sons, New Delhi.
3. S P Jain and K L Narang, Advanced Accountancy Vol – I, 2016, Kalyani Publishers, New Delhi.
4. Dalston L Cecil and Jenitra L Merwin, Financial Accounting, 3rd ed., 2017, Learntech Press, Trichy.
5. Fundamentals of Accounting, 2017, The Institute of Chartered Accountants of India, New Delhi.